ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,921—1970 අගෝස්තු 28 වැනි සිකුරාදා—1970.8.28
14,921 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித் தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் | — | விலைக்கட்டளைகள் | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 475 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | 476 | வரவு செலவுத் திரட்டுக்கள் | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 477 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 486 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அறிவித்தல்கள் | 479 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 246

எண். டி/விளவ/42 (IV)

**தரைப்படை—இலங்கை தொண்டர் படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலை துறத்தல், இளைப்பாறல், பதவி உயர்ச்சி, நியமனம் ஆகியன**

(அ) **பதவிநிலை துறத்தல்.**—லெவ்ரினன்ற்–கேணல் வில்பிரட் கயசின்த் சவரிமுத்து, சி. என். ஜி., 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 2 ஆவது பட்டாளம், இலங்கை தேசிய காவலாளர் படையின் ஏவல் உத்தியோகத்தர் பதவியை துறப்பார்.

(ஆ) **இளைப்பாறல்.**—லெவ்ரினன்ற்–கேணல் வில்பிரட் கயசின்த் சவரிமுத்து, ஜி. என். ஜி., 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் இலங்கை தொண்டர் படையில் இருந்து இளைப்பாறி விட்டார்.

(இ) **பதவி உயர்ச்சி.**—1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் தற்காலிக லெவ்ரினன்ற்–கேணல் ஆகக் கடவர்: மேஜர் ஒஸ்வல்ட் சார்ல்ஸ் த அல்விஸ், சி. எல். ஐ.

(ஈ) **நியமனம்.**—தற்காலிக லெவ்ரினன்ற்–கேணல் ஒஸ்வல்ட் சார்ல்ஸ் த அல்விஸ், சி. எல். ஐ., 1970 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 2 ஆவது பட்டாளம், இலங்கை தேசிய காவலாளர் படையின் பதில் ஏவல் உத்தியோகத்தராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஹு ஓகத்து மீ 11 ந உ.

8–1036

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்
கொழும்பு,
1969 ம் ஹு திசெம்பர் மீ 14 ந உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

# நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 248

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செய நற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. டி. விமலரட்ண .. | பதில் செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 ஓகஸ்ட் 13 லிருந்து 21 வரை.. | நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் இல்லாதகாலங்கள் |
| திரு. ஆர். டி. பி. ஜயசேகர .. | பதில் மேலதிக நீதவான் முதலியன, குருணகல் | 1970 ஓகஸ்ட் 14 லிருந்து 26 வரை.. | அல்லது மறு அறிவித்தல் வரை |
| திரு. எஸ். எம். முஸ்தபா .. | மேலதிக நீதவான் முதலியன, கண்டி .. | 1970 ஓகஸ்ட் 15 லிருந்து 17 வரை.. | திரு. எவ். ஜி. பி. பெர்ணன்டோ இல்லாத காலங்கள் |
| திரு. எச். எஸ். ஏ. பெரேரா .. | மேலதிக நீதவான், குருணகல், குளியப்பிட்டி முதலிய இடங்களில் .. .. | 1970 ஓகஸ்ட் 8 .. லிருந்து 10 வரை.. | திரு. டி. எஸ். டி. பி. ஆர் சேனநாயக்க இல்லாதகாலங்கள் |
| திரு. எவ். ஆர். வீரசேகர .. | மேலதிக நீதவான் முதலியன, இரத்தினபுரி .. | 1970 ஓகஸ்ட் 7 ம் .. 10 லிருந்து 13 ம் | திரு. எல். எஸ். பெரேரா இல்லாத காலங்கள் |
| திரு. ரி. எஸ். டேல் .. | மேலதிக நீதவான் முதலியன, அம்பாந் தோட்டை | 1970 ஓகஸ்ட் 11 .. | திரு. எச். டபிள்யு. சேனநாயக்க இல்லாத காலம் |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | மேலதிக நீதவான் முதலியன, சிலாபம், புத்தளம் | 1970 ஓகஸ்ட் 5 .. | திரு. எஸ். பி. குணவர்த்தன இல்லாத காலம் |
| திரு. எஸ். கனகரட்ணம் .. | மேலதிக நீதவான் முதலியன, யாழ்ப்பாணம் | 1970 ஓகஸ்ட் 7 .. லிருந்து 10 வரை | திரு. ஜே. ஜே. எவ். ஏ. டயஸ் இல்லாத காலங்கள் |
| திரு. எம். ஓ. எம். தாகீர் .. | மேலதிக நீதவான் முதலியன, குருணகல் .. | 1970 ஓகஸ்ட் 10 .. | திரு. டபிள்யு. என். எஸ். விஜரட்ண இல்லாத காலம் |
| திரு. ரி. எஸ். பி. டீ எஸ். குணசேகர | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, பலப்பிட்டி | 1970 ஓகஸ்ட் 10, 11 | திரு. எல். எச். டீ அல்விஸ் இல்லாத காலங்கள் |
| திரு. டபிள்யு. ஜே. பொன்சேக .. | மேலதிக நீதவான் முதலியன, பாணந்துறை | 1970 ஓகஸ்ட் 7 ... | திரு. ஜி. ஜி. டி. டீ சில்வா இல்லாத காலம் |
| திரு. எஸ். ஆர். பி. ஏ. குணதிலக்க | மேலதிக நீதவான் முதலியன களுத்துறை .. | 1970 ஓகஸ்ட் 4 .. | திரு. டபிள்யு. ஜி. என்.வீரரட்ண இல்லாத காலம் |
| திரு. கே. வி. நடருஜா .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, பதுளை | 1970 ஓகஸ்ட் 4 .. லிருந்து 8 வரை | திரு. ரி. டி. ஜி. டீ அல்விஸ் இல்லாத காலங்கள் |
| திரு. சி. எம். எல். டீ சில்வா .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, நுவரெலியா | 1970 ஓகஸ்ட் 11 .. | திரு. ஜே. பி. சி. சுவரிஸ், இல்லாத காலம் |
| திரு. எஸ். எம். அபுர்தாகிர் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, புத்தளம் | 1970 ஓகஸ்ட் 13 லிருந்து 16 வரை | திரு. கே. பாலகிட்ணர் இல்லாத காலங்கள் |
| திரு. டி. சி. ஈ. வி. கருணரட்ண .. | மேலதிக நீதவான் முதலியன, நீர்கொழும்பு | 1970 ஓகஸ்ட் 12 ம் 15ம் | திரு. பி. பி. ரம்புக்வெல்ல இல்லாத காலங்கள் |
| திரு. கே. ரட்ணசிங்கம் .. | மேலதிக நீதவான் முதலியன, பருத்தித்துறை | 1970 ஓகஸ்ட் 20 லிருந்து | பருத்தித்துறை நீதிமன்ற 2697 இலக்கவழக்கில நீதவானின் சான்றைப் பதிவு செய்வதற்கு |
| திரு. சி. ஈ. பெரைரா .. | மேலதிக நீதவான் முதலியன, கொழும்பு .. | 1970 ஓகஸ்ட் 14 லிருந்து 17 வரை | ——— |
| திரு. எச். ஈ. விஜதுங்க .. | மேலதிக நீதவான் முதலியன, கொழும்பு .. | 1970 ஓகஸ்ட் 18 லிருந்து 21 வரை | ——— |
| திரு. டபிள்யு. டி. பெரேரா .. | மேலதிக நீதவான் முதலியன, கொழும்பு .. | 1970 ஓகஸ்ட் 22 லிருந்து 26 வரை | ——— |
| திரு. ஏ. சீமாம்பிள்ளை .. | மேலதிக நீதவான் முதலியன, மன்னர் .. | 1970 ஓகஸ்ட் 12 .. | திரு. எம். பி. ஜி. திசநாயக்க இல்லாத காலம் |
| திரு. ஏ. சீமாம்பிள்ளை .. | மேலதிக நீதவான் முதலியன, மன்னர் .. | 1970 ஓகஸ்ட் 9 .. லிருந்து 11 வரை | திரு. கே. வி. நரவட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. பி. வி. சேனதிருஜா .. | மேலதிக நீதவான் முதலியன, வவுனியா .. | 1970 ஓகஸ்ட் 9 .. லிருந்து 11 வரை | திரு. ஏ. எம். ஐ. சாகீட் இல்லாத காலங்கள் |
| திரு. பி. வி. சேனதிருஜா .. | வவுனியா வடக்கு முதலியவற்றின் ஊர்நீதி மன்றப் பதில் தலைவர் | 1970 ஓகஸ்ட் 11 .. | திரு. ஏ. எம். ஐ. சாகீட் இல்லாத காலங்கள் |
| திரு. டி. ஜயசிங்க .. | கல்போடக்கோறளை முதலியவற்றின் ஊர்நீதி மன்றப் பதில் தலைவர் | 1970 ஓகஸ்ட் 19, 21, 24 | திரு. ஜே. டபிள்யு. பி. உடலகம இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. சீமாம்பிள்ளை .. | மன்னர் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் .. | 1970 ஓகஸ்ட் 11 .. | திரு. கே. வி. நவரட்ணம் இல்லாத காலம் |
| திரு. எல். பி. கரல்லியட்ட .. | பற்றடும்பர முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஓகஸ்ட் 12 .. | திரு. ஜி. நுகவெல இல்லாத காலம் |
| திரு. எஸ். ஏ. யற்றவர .. | மாத்தளை தெற்கு முதலியவற்றின் ஊர் நீதி மன்றப் பதில் தலைவர் | 1970 ஓகஸ்ட் 25 லிருந்து 30 வரை செப்ரெம்பர் 1 லிருந்து 7 வரை, 9ம் | திரு. கே. ஜி. ஜயசேன இல்லாத காலங்கள் |
| திரு. கே. அரசகோன் .. | ஏறுவில்—பொறைதீவு முதலியவற்றின் ஊர்நீதி மன்றப் பதில் தலைவர் | 1970 ஓகஸ்ட் 12 லிருந்து 15 வரை | திரு. எச். அமீன் இல்லாத காலங்கள் |
| திரு. எம். ஏ. காதர் .. | கொழும்பு வடக்கு முதலியவற்றின் விசேட காதி, அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | ——— | கொழும்பு வடக்கு காதி நீதிமன்ற 5909/எம் இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த.பெ. 573,
கொழும்பு 12,
1970 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 21 ந் வ.

சிறீமேவன் அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

8–1023

## மற்றைய நியமனங்களும் பிறவும்

*1970 இன் இல. 249*

*பா 4/சாவி/நில 12., பா 4/சாவி/நில 28., பா 4/சாவி/நில 29., பா 4/சாவி/நில 32., பா 4/சாவி/33/20.*

### நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டம்

*82 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

(6 ஆம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 82 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சர் ஜுசே மரியா ஜயமான்ன ஆகிய யான்—

1. எஸ். எச். எஸ். குணரத்ன அவர்களை, கம்பகா காணிப்பதிவாளராகவும் மேலதிக மாவட்டப் பதிவாளராகவும் பதவி வகிக்கும் காலத்துள், கம்பகா நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

2. எச். டி. கே. வீரமன் அவர்களை, காலிக் காணிப் பதிவாளராகவும் மேலதிக மாவட்டப் பதிவாளராகவும் பதவி வகிக்கும் காலத்துள் காலி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

3. ரி. சின்னத்துரை அவர்களை, திருகோணமலைக் காணிப் பதிவாளராகவும் மேலதிக மாவட்டப் பதிவாளராகவும் பதவி வகிக்கும் காலத்துள், திருகோணமலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

4. ஜி. எ. பி. பெரேரா அவர்களை, நீர்கொழும்பு காணிப் பதிவாளராகவும் மேலதிக மாவட்டப்பதிவாளராகவும் பதவி வகிக்கும் காலத்துள், நீர்கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

5. சி. எச். குணவர்தன அவர்களை, மாத்தறைக் காணிப் பதிவாளராகவும் மேலதிக மாவட்டப் பதிவாளராகவும் பதவி வகிக்கும் காலத்துள், மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

6. டபிள்யு. எம். கே. பி. வீரசேகர அவர்களை, மாத்தளைக் காணிப் பதிவாளராகவும் மேலதிக மாவட்டப் பதிவாளராகவும் பதவி வகிக்கும் காலத்துள், மாத்தளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

7. டபிள்யு. ஒ. எச். இந்திரரத்ன அவர்களை, அனுராதபுரக் காணிப் பதிவாளராகவும் மேலதிக மாவட்டப் பதிவாளராகவும் பதவி வகிக்கும் காலத்துள் அனுராதபுர நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

8. டி. ஞானகுரு அவர்களை, மன்னார்க் காணிப் பதிவாளராகவும், மேலதிக மாவட்டப் பதிவாளராகவும் பதவி வகிக்கும் காலத்துள், மன்னார் நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

9. டபிள்யு. எம். ஜே. வீரசூரிய அவர்களை, சிலாபம் காணிப் பதிவாளராகவும் மேலதிக மாவட்டப் பதிவாளராகவும் பதவி வகிக்கும் காலத்துள், சிலாபம் நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

10. எல். பியசேன அவர்களை, தேசிய வருமானவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட உதவி ஆணையாளர் பதவியை வகிக்கும் காலத்துள், சகல நீதிநிருவாக மாவட்டங்களுக்குமான சமாதான நீதிவானொருவராகவும்,

11. பி. இ. பெர்நாந்து அவர்களை, தேசிய வருமானவரித் திணைக்களத்தின் உதவி ஆணையாளராகப் பதவி வகிக்கும் காலத்துள், சகல நீதிநிருவாக மாவட்டங்களுக்குமான சமாதான நீதிவானொருவராகவும்,

12. சி. சிவப்பிரகாசம் அவர்களை, தேசிய வருமானவரித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பதவியை வகிக்கும் காலத்துள், சகல நீதிநிருவாக மாவட்டங்களுக்குமான சமாதான நீதிவானொருவராகவும்,

13. கெ. எஸ். பராக்கிரம அவர்களை, வருமானவரித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பதவியை வகிக்கும் காலத்துள், சகல நீதிநிருவாக மாவட்டங்களுக்குமான சமாதான நீதிவானொருவராகவும்,

14. நாகலிங்கம் தங்கராசா அவர்களை, இலங்கை அரச கடற்படையின் சிவில் நிருவாக அலுவலராகவும் கணக்காளராகவும் பதவி வகிக்கும் காலத்துள், கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

15. லீல் குண்சேகர அவர்களை, அமைச்சரவையின் செயலாளராகப் பதவி வகிக்கும் காலத்துள், கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

16. மத்தும பதிறென்நெகெலாகே தாவித் சிங்கோ அவர்களை, பொலநறுவை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

இத்தால் நியமிக்கின்றேன்.

ஜே. எம். ஜயமான்ன,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 ஆகத்து 20 ஆந் நாள்.

8-960

---

*1970 இன் இல. 250*

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

திரு. உபாலி லேனவ அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொதுநிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-804

---

*1970 இன் இல. 251*

### நொத்தாரிசு கட்டளைச்சட்டம் (107 ம் அதிகாரம்)

லக்ஷ்மன் சுனில் பிரேம் ஜயதிலக்க அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில, சிங்கள பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொது அலுவலக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-807

---

*1970 இன் இல. 252*

### நொத்தாரிசு கட்டளைச்சட்டம் (107 ம் அதிகாரம்)

திரு. ஓவிரகலகே சோமதாச பெரேரா அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-802

---

*1970 இன் இல. 253*

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் A107 ம் அதிகாரம்)

செல்வி மாலினி சபாரத்தினம் அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-971

---

*1970 இன் இல. 254*

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

சேன எதிரிவீர விஜேசூரிய அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-978

1970 இன் இல. 255

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

ஜானக எரிக் குணசேகர அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-984

---

1970 இன் இல. 256

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

திரு. டயஸ் சமரகோன் அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொதுநிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-980

---

1970 இன் இல. 257

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

நெவில் நாலின் பெரேரா அமரசிங்க அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொதுநிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-985

---

1970 இன் இல. 258

நொத்தாரிசு கட்டளைச்சட்டம் (107 ம் அதிகாரம்)

நெவில் ஹென்றி பர்ணந்து அவர்கள் பாணந்துறை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-808

---

1970 இன் இல. 259

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

மயிகல் இரசிங்க அவர்கள் பாணந்துறை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-979

---

1970 இன் இல. 260

நொத்தாரிசு கட்டளைச்சட்டம் (107 ம் அதிகாரம்)

திருமதி சிசிர பத்மா ஜயவர்தன அவர்கள் நீர்கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில, சிங்கள பாஷைகளில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-806

---

1970 இன் இல. 261

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

அப்துல் மஜீத் மொகமட் ஹம்ஸா அவர்கள் களுத்துறை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொதுநிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-982

---

1970 இன் இல. 262

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

ஜோன் எவ்லின் இலங்கன்திலக்க அவர்கள் கண்டி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொதுநிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-813

---

1970 இன் இல. 263

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கார்தியே ஹேவாவசன் கலகே லயனல் அசோக டி சில்வா அவர்கள் காலி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-801

---

1970 இன் இல. 264

நொத்தாரிசு கட்டளைச்சட்டம் (107 ம் அதிகாரம்)

செல்வி ஜோய்ஸ் மானெல் விஜேசிங்க, காலி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-809

---

1970 இன் இல. 265

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

ஆழ்வாபிள்ளை நடராஜசுந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் பருத்தித்துறை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-803

---

1970 இன் இல. 266

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

திரு. உதுமாலெவ்வை முகம்மது முகைதீன் அவர்கள் மட்டக்களப்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-983

---

1970 இன் இல. 267

நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

ஹோத் பதிரன்னேலாகே புஞ்சி பண்டா அவர்கள் மாகாந்துறையில் வசிக்குமிடமும் காரியாலயமும், கந்தனே கெதறயில் மேலதிக காரியாலயமுமாக, குருநாகலை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையில் கடமை பார்க்கும் நொத்தாரிசுவாகக், கௌரவ பொதுநிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல் அமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

8-986

---

1970 இன் இல. 268

நொத்தாரிசு கட்டளைச்சட்டம் (107 ம் அதிகாரம்)

திரு. கச்சகடுகே கொட்பிறே ஜோசப் பிறணந்து அவர்கள் சிலாபம் நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-805

*1970 இன் இல. 269*

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

செல்வி இந்திரா பிரியதர்ஷனி ஆசிர்வாதம் அவர்கள் இரத்தின புரி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

8-981

---

*1970 இன் இல. 270*

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

டென்சில் மர்வின் லுவி பர்ளுந்து அவர்கள் கேகாலை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமைபார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ பொதுநிருவாக, உள்ளூராட்சி, உள் நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள் ளார்.

8-987

---

# அரசாங்க அறிவித்தல்கள்

## முத்திரைக் கட்டளைச் சட்டம்

முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் (247 ம் அத்தியாயமான) 6 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினுலாக்கப்பட்ட விதி.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு, 21.8.1970.

**விதி**

முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் (247 ஆம் அத்தியாயமான) 6 ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு ஒகத்து 5 ஆம் தேதிய 14,707 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 1970 ம் ஆண்டு ஆகஸ்டு 14 ஆம் தேதிய 14,919 ஆம் இலக்க வர்த்தமானியில் கடைசியாகத் திருத்தப்பட்டதுமான விதியானது அதற்கான அட்டவணை யின் 80 ஆம் அம்சத்தை உடனடுத்துப் பின்வரும் புது அம்சங்களை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

"81. காலஞ் சென்ற பிரதம மந்திரி கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் உருவப்படத்தைக் குறிக்கும் 10 சதப் பெறுமதியுடைய அஞ்சல் இறைவரி முத்திரைகள்."

8–1025

---

**அஞ்சலலுவலகக் கட்டளைச் சட்டம்**

அஞ்சலலுவலகக் கட்டளைச் சட்டத்தின் (190 ஆம் அத்தியாயத் தில்) 16 ஆம் பிரிவின் கீழ் அஞ்சற்தந்தித் தொடர்புகள் அமைச் சரினுலாக்கப்பட்ட விதி.

செ. குமாரசூரியர்,
அஞ்சற்தந்தித் தொடர்புகள் அமைச்சர்.

கொழும்பு, 19. 8. 1970.

**விதி**

அஞ்சலலுவலகக் கட்டளைச் சட்டத்தின் (190 ஆம் அத்தியாய மான) 16 ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு ஒகத்து 5 ஆம் தேதிய 14,707 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப் பட்டதும் 1970 ஆம் ஆண்டு ஆகஸ்டு 14 ஆம் தேதிய 14,919 ஆம் இலக்க வர்த்தமானியில் கடைசியாக திருத்தப்பட்டதுமான விதி யானது அதற்கான அட்டவணையின் 81 ஆம் அம்சத்தை உடனடுத் துப் பின்வரும் புதிய அம்சங்களை உட்புகுத்துவதன் மூலம் இத தால் மேலும் திருத்தப்படுகின்றது.

"82. காலஞ் சென்ற பிரதம மந்திரி கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாராயக்காவின் உருவப் படத்தைக் குறிக்கும் 10 சதப் பெறுமதியுடைய அஞ்சல் இறைவரி முத்திரைகள்".

8-954

---

**அறிவித்தல்**

132 ம் அத்தியாயமாம் இந்தியக் குடியணவுத் தொழிலாளர் கட் டளைச் சட்டத்தின் 9(1) ம் பிரிவின்படி, பின்வருவோரை இந்தி யக் குடியணவுத் தொழிலாளர் சபையில் உறுப்பினராயிருத்தற் குக் கௌரவ தொழில் அமைச்சரவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித் துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. திரு. ஜே. டீ. வீரசேகரா, பா. உ.
2. திரு. பியசேன தென்னக்கூன், பா. உ.
3. திரு. ஏ. அசீஸ், பா. உ.
4. திரு. வி. பி. கணேசன்
5. திரு. ரீ. ஆர். ஆர். விஜேவிக்கிரம
6. திரு. ஏ. எம். எஸ். பெரேரா
7. திரு. கே. ஜே. இரத்துவத்தை

பதில் நிரந்தரச் செயலாளர்.

தொழில் அமைச்சு,
கொழும்பு 5,
1970. 8. 17.

8-853

---

எல். டீ.—பீ. 12/68.

**1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சட்டம்**

**2(1) ஆம் பிரிவின்கீழான கட்டளை**

1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபி விருத்திச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவினுல் எனக்கு உரித்தாக்கப் பட்ட தத்துவங்களைக்கொண்டு, கப்பற் போக்குவரத்து உல்லாசப் பிரயாண அமைச்சர், இடம்பிட்டியே ராலலாகே புஞ்சிபண்டா களுகல்லை ஆகிய நான், 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட பொதுக் கூட்டுத்தாபனமொன்ருன இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையின் உல்லாசப் பிரயாண அபிவிருத்தித் திட்டமொன்றின் நோக்கத்துக்கு, இதற்குள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள காணிகள் கொள்ளப்படுதலை இக்கட்டளைமூலம் அங்கீகரிக்கிறேன்.

கப்பற்போக்குவரத்து உல்லாசப்
பிரயாண அமைச்சர்.

கொழும்பு, ஒகஸ்த்து 12, 1970.

**அட்டவணை**

1. தெற்கு மாகாணம், காலி மாவட்டம், வெந்தொட்டை வளல்லாவிற்றிக் கோறளை மேற்கிலுள்ள அங்காகொடைக் கிராம சேவகர் பிரிவிலுள்ளதும் பத்திறிகாவத்தை என அழைக்கப்படு வதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதும் 0 ஏக்கர் 0 றூட் 7 பேர்ச்செஸ் விஸ்தீரணமுள்ளதுமான காணித்துண்டொன்று :—

வடக்கு : நடுவத்தை என அழைக்கப்படும் அடுத்துள்ள காணி,
கிழக்கு : அதே காணியின் ஒரு பாகம்,
தெற்கு : அதே காணியின் ஒரு பாகம்,
மேற்கு : அதே காணியின் ஒரு பாகம்.

2. முன்னே சொல்லப்பட்ட வெந்தோட்டை வளல்லாவிற்றிக் கோறளையிலுள்ள அங்காகொடைக் கிராம சேவகர் பிரிவிலுள்ள தும் நடுவத்தை என அழைக்கப்படுவதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதும் 0 ஏக்கர் 0 றூட் 8 பேர்ச்செஸ் விஸ்தீரணமுள்ளது மான காணித்துண்டொன்று :—

வடக்கு : சறன்காற ரோட்டு,
கிழக்கு : அதே காணியின் ஒரு பாகம்,
தெற்கு : பத்திறிகாவத்தை என அழைக்கப்படும் அடுத்துள்ள காணி,
மேற்கு : அதே காணியின் ஒரு பாகம்.

8-815

---

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

பருத்தித்துறை, சாவகச்சேரி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள சிவசங்காரம் பாலேந்திரன் அவர்கள், மேற்படி நீதி பரிபாலன ஆதிக்கத்துக்குள் தமிழ் பாஷையிலும் நொத்தாரிசுவா கக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ அரசாங்க நிருவாக, உள்ளூ ராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக் கப்பட்டுள்ளது.

8-812

### இணக்கச் சபைகள் சட்டம்

*1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப் பட்டு 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதி விசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 4 (1) ஆம் பிரிவினால் எனக்குரித் தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதியமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், பதுளை மாவட்டத்திலுள்ள பிந்தென்னைக் கிராமப் பகுதிக் கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் தலைவர் பதவியி லிருந்து விலக்கப்பட்ட, மாபாக்கடவீவாவைச் சேர்ந்த விஜேதுங்க முதியஞ்சேலாகே ஜயவர்த்தன பண்டா அவர்களுக்குப் பதிலாக, மகியங்கனையைச் சேர்ந்த பலகல்லே ராஜபக்ச முதியஞ்சேலாகே விஜேகோன் அவர்களை மேற்குறிப்பிட்ட குழாத்தின் உறுப்பினரா கப் பதவி வகிக்கும் காலத்துள் அதன் தலைவராகவிருக்க இத்தால் நியமிக்கின்றேன்.*

*இரத்தினசிறி விக்கிரமநாயக்க,*
*நீதி அமைச்சரின் பாராளுமன்றச்*
*செயலாளர்.*

*நீதி அமைச்சு,*
*கொழும்பு, 1970 ஆகத்து 17 ஆந் நாள்.*

*8-882/1*

---

### இணக்கச் சபைகள் சட்டம்

*1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப் பட்டு 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதி விசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 4 (3) ஆம் பிரிவினால் எனக்குரித் தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதியமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், பதுளை மாவட்டத்திலுள்ள பிந்தென்னைக் கிராமப் பகுதிக் கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் தலைவரான மாபாக்கடவீவாவைச் சேர்ந்த விஜேதுங்க முதியஞ்சேலாகே ஜயவர்த்தன பண்டா அவர்களை இத்தால் பதவியிலிருந்து அகற்று கின்றேன்.*

*இரத்தினசிறி விக்கிரமநாயக்க,*
*நீதி அமைச்சரின் பாராளுமன்றச்*
*செயலாளர்.*

*நீதி அமைச்சு,*
*கொழும்பு, 1970 ஆகத்து 17 ஆந் நாள்.*

*8-882/2*

---

### இணக்கச் சபைகள் சட்டம்

#### 3(2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அர சப் பேரவைக் கட்டளையின் 47(2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப் படும் 1965 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத் தப்பட்டவாறுள்ள, 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக் கச் சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) உட்பிரிவின் ஏற் பாடுகளைப் பின்பற்றி, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலா ளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், இதற்குள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள இடப்பரப்பு ஒவ்வொன்றுக்கும் இணக்குவோர் குழாம் ஒவ்வொன்றினை ஏற்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது எனவும், அத்தகைய இடப்பரப்பு ஒவ்வொன்றினதும் இணக்குவோர் குழாத்துக்கு நியமிக்கப்படவேண்டிய ஆட்களைப் பற்றி 1970, செத்தெம்பர் 30 ஆந் நாள் அல்லது அதற்கு முன்னர் அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான விதப்புரைகள், பெரும் பாக அரசிறை அலுவலரின் அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளக் கூடிய படிவத்தில் எழுத்தில் எனக்குச் செய்யப்படலாமெனவும் இத் தால் அறிவிக்கின்றேன்.*

*இரத்தினசிறி விக்கிரமநாயக்க,*
*நீதி அமைச்சரின் பாராளுமன்றச்*
*செயலாளர்.*

*நீதி அமைச்சு,*
*கொழும்பு, 1970, ஆகத்து 17 ஆந் நாள்.*

#### அட்டவணை

1. கொழும்பு மாவட்டத்திலுள்ள உடுககபற்றுக் கிராமப் பகுதி.
2. கொழும்பு மாவட்டத்திலுள்ள தமுகமைப் பட்டினசபைப் பகுதி.
3. கொழும்பு மாவட்டத்திலுள்ள களனிப் பட்டினசபைப் பகுதி.
4. கொழும்பு மாவட்டத்திலுள்ள உடுகம்பொலைக் கிராமப் பகுதி.
5. கொழும்பு மாவட்டத்திலுள்ள மினுவாங்கொடைப் பட்டின சபைப் பகுதி.
6. கொழும்பு மாவட்டத்திலுள்ள கலகிட்டியாவைக் கிராமப் பகுதி.
7. கொழும்பு மாவட்டத்திலுள்ள மொரட்டுவை நகரசபைப் பகுதி.
8. காலி மாவட்டத்திலுள்ள அகங்கமைப் பட்டினசபைப் பகுதி.
9. அனுராதபுர மாவட்டத்திலுள்ள கிரலவைக் கோரளைக் கிழக் குக் கிராமப் பகுதி.
10. மாத்தளை மாவட்டத்திலுள்ள உடுகொடை உடசியப்பற்று கிழக்குக் கிராமப் பகுதி.
11. புத்தளம்-சிலாபம் மாவட்டத்திலுள்ள ஆண்டிகமைக் கிராமப் பகுதி.
12. புத்தளம்-சிலாபம் மாவட்டத்திலுள்ள கம்மற்பற்று கிராமப் பகுதி.
13. பதுளை மாவட்டத்திலுள்ள கந்தப்பளை இல. 1 கிராமப் பகுதி.
14. பதுளை மாவட்டத்திலுள்ள கப்புத்தளேகமைக் கிராமப் பகுதி.
15. பதுளை மாவட்டத்திலுள்ள நிகபொத்தைக் கிராமப் பகுதி.
16. இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள கிலீமலைக் கிராமப் பகுதி.
17. இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள குருவிற்றைக் கிராமப் பகுதி.
18. மொனராகலை மாவட்டத்திலுள்ள வெள்ளைவாய்க் கிராமப் பகுதி.
19. நுவரேலியா மாவட்டத்திலுள்ள கொஹாக கிராமப் பகுதி.

*8-881*

---

### இணக்கச் சபைகள் சட்டம்

*1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அர சப் பேரவைக் கட்டளையின் 47(2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப் படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத் தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 4(3) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட் டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதியமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், குரு நாகல் மாவட்டத்திலுள்ள முருதெங்கே கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் தலைவரான நக்கா வத்தை, வக்குணுவலையைச் சேர்ந்த பதிராஜ முதியஞ்சேலாகே சுவந்தரத்தின அவர்களை இத்தால் பதவியிலிருந்து அகற்றுகின் றேன்.*

*இரத்தினசிறி விக்கிரமநாயக்க,*
*நீதி அமைச்சரின் பாராளுமன்றச்*
*செயலாளர்.*

*நீதி அமைச்சு,*
*கொழும்பு, 1970, ஆகத்து 17 ஆந் நாள்.*

*8-883/1*

---

### இணக்கச் சபைகள் சட்டம்

*1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அர சப் பேரவைக் கட்டளையின் 47(2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப் படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத் தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட் டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், குரு நாகல் மாவட்டத்திலுள்ள முருதெங்கே கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் தலைவர் பதவியி லிருந்து விலக்கப்பட்ட நக்காவத்தை வக்குணுவலையைச் சேர்ந்த பதிராஜ முதியஞ்சேலாகே சுவந்தரத்தின அவர்களுக்குப் பதிலாக, ஹொறொம்பாவை கொவுல் வீவா, பட்டகிரவத்தையைச் சேர்ந்த தொன் பவுலிஸ் ஜயசேகர அவர்களை மேற்குறிப்பிட்ட குழாத்தின்*

உறுப்பினராகப் பதவி வகிக்கும் காலத்துள் அதன் தலைவராக விருக்க இத்தால் நியமிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970, ஆகத்து 17 ஆந் நாள்.

8-883/2

---

### இணக்கச் சபைகள் சட்டம்

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47(2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், சிலாபம் மாவட்டத்திலுள்ள கம்மல்பற்றுக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் தலைவர் பதவியிலிருந்து விலகிய, வென்னப்பு, தும்மலதெனியா மேற்கைச் சேர்ந்த டெனிஸ் மில்றன் கியுபெட் ரணவீர அவர்களுக்குப் பதிலாக வென்னப்பு, மேற்குத் தும்மலதெனியாவைச் சேர்ந்த பத்தினி குட்டிகே அந்தனி நோனிஸ் அவர்களை மேற்குறிப்பிட்ட குழாத்தின் உறுப்பினராகப் பதவி வகிக்கும் காலத்துள் அதன் தலைவராகவிருக்க இத்தால் நியமிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970, ஆகத்து 17 ஆந் நாள்.

8-883/3

---

### இணக்கச் சபைகள் சட்டம்

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1970 யூன் 16 ஆம் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 4 (3) ஆம் பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதியமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், கேகாலை மாவட்டத்திலுள்ள உடுவ பலாதக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் உறுப்பினர்கள் யாவரையும் தலைவரையும் இத்தால் பதவியிலிருந்து அகற்றுகின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 ஆகத்து 20 ஆந் நாள்.

8-966

---

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள செல்வி மேரிருத் இந்திராணி விஜேசிங்க அவர்கள் மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

8-814

---

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

பலப்பிட்டிய நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையின் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள றுவன்புற அமரநாத டீ சில்வா அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ பொதுநிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

8-810

---

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள ரஜ்சன் அபேசேகர அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ அரசாங்க நிருவாக உள்ளூராட்சி உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

8-811

---

எல்./டி.—பி. 64/48

### சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

#### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 30 ம் பிரிவிற்கமையத் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அச்சடிப்புத் தொழிற் சம்பளச் சபை, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு, அவ்வட்டவணையிற் குறிக்கப்பட்ட சபையின் தீர்மானங்களை மாற்ற உத்தேசிக்கிறதென்று மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கு ஆட்சேபனைகள் 1970 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 12 ந் தேதி பகல் 12 மணிவரைக்கும் இச்சபையின் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனையொவ்வொன்றும் அவ்வண்ணம் ஆட்சேபித்தற்கான நியாயங்களைக் காட்டும் கூற்றென்றைக் கொண்டதாய் எழுத்தில் தெரிவிக்கப்பட வேண்டும்.

டபிள்யூ எல். பீ. டி மெல்,
அச்சடிப்புத் தொழிற் சம்பளத் தலைவர்.

கொழும்பு.
1970 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 18 ந் உ.

## அட்டவணை

கீழெல்லைச் சம்பளம் தொடர்பாக அச்சடிப்புத் தொழிற் சம்பளச் சபையினுல் ஆக்கப்பட்டு 1945 ம் ஆண்டு ஜூலை மாதம் 21 ந் தேதியன்று வெளிவந்த 9436 ம் இல. அசாதாரண வர்த்தமானியிற் பிரசுரமான அறிவித்தலின்கத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவையும், காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டவையுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ம் பாகத்திற்குப் பதிலாக, பின்வரும் புதிய பாகத்தையிடுவதன் மூலம் மேலும் மாற்றப்படுகின்றன :—

"II ம் பாகம்

(1) அச்சடிப்புத் தொழிலுக்குரிய சம்பளம் மாதாந்த அடிப்படையிற் கொடுக்கப்பட வேண்டும்.

(2) நேர வேலைக்குரிய கீழெல்லைச் சம்பள வீதம் கீழே காட்டிய வண்ணம் ஓர் அடிப்படை வீதத்தையும் ஒரு விசேட படியையும் கொண்டதாயிருத்தல் வேண்டும் ;

(3) (அ) இப்பாகத்திற் குறிக்கப்பட்ட யாதாயினுமொரு வகுப்பைச் சேர்ந்த தொழிலாளரொருவர் கீழே I ம் பத்தியிற் குறிக்கப்பட்ட எம்மாதத்திலும் கீழே II ம் பத்தியில் அம்மாதம் சம்பந்தமாகக் குறிக்கப்பட்ட கீழெல்லைத் தொகை வேலை நாட்களுக்கு வேலை செய்யாதிருப்பின், இப்பாகத்தில் அவ்வகுப்பு சம்பந்தமாக விதிக்கப்பட்ட கீழெல்லை மாதாந்த விகிதத்திற்குச் சமமான ஒரு தொகையே அவருக்கு அம்மாதச் சம்பளமாகக் கொடுக்கப்பட வேண்டும். ஆயினும், ஐந்து ஞாயிற்றுக்கிழமைகளுள்ள யாதாயினுமொரு மாதம் சம்பந்தமாக மேற்கூறிய II ம் பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள கீழெல்லைத் தொகை வேலை நாட்களில் ஒருநாள் குறைக்கப்படவேண்டும்.

இவ்வுப பந்தியின் நோக்கங்களுக்காக, வேலைக்குச் செல்லும் எத்தொழிலாளருக்கும் வேலைக்கமர்த்துபவர் வேலைகொடுக்கத் தவறும் எந்நாளும் அத்தொழிலாளர் வேலைசெய்த நாளாகக் கருதப்படவேண்டும்.

| I<br>மாதம் | II<br>கீழெல்லைத்தொகை வேலை நாட்கள் |
|---|---|
| ஜனவரி .. .. | 27 |
| பெப்ருவரி .. | 24 |
| மார்ச் .. .. | 27 |
| ஏப்ரில் .. .. | 26 |
| மே .. .. | 27 |
| ஜூன் .. .. | 26 |
| ஜூலை .. .. | 27 |
| ஓகஸ்ட் .. .. | 27 |
| செப்றெம்பர் .. | 26 |
| ஒக்ரோபர் .. | 27 |
| நவெம்பர் .. | 26 |
| டிசம்பர் .. .. | 27 |

(ஆ) யாதாயினுமொரு மாதம் சம்பந்தமாக இப்பந்தியின் (அ) ம் உபபந்தியிற் குறிக்கப்பட்ட கீழெல்லைத் தொகை வேலைநாட்களுக்கு மேலதிகமான வேலைசெய்யும் ஒவ்வொரு நாளுக்கும் கொடுக்கப்பட வேண்டிய கீழெல்லைச் சம்பளவீதம் கீழெல்லை மாதாந்த வீதத்தை 25 ஆற் பிரிக்கவரும் கீழெல்லை நாளாந்த வீதத்தின் இருமடங்குக்குச் சமமான தொகையாகும்.

(4) ஒரு தொழிலாளர் ஒரு முழு மாதத்திற்கு வேலை செய்திராவிடின் அம்மாதத்திலுள்ள நாட்களின் தொகைக்கும் வேலைசெய்த காலத்திற்கும் உள்ள அதே விகிதாசாரத்தை கீழெல்லை மாதாந்த வீதத்திற்கு உடைய தொகையே அவருக்கு அம்மாதச் சம்பளமாகக் கொடுக்கப்படவேண்டும்.

(5) உத்தரவின்றி வேலைக்குவராமை காரணமாக, இப்பாகத்திற் குறிக்கப்பட்ட யாதாயினுமொரு வகுப்பைச் சேர்ந்த தொழிலாளரொருவர் 3(அ) ம் பத்தியில் யாதாயினுமொரு மாதம் சம்பந்தமாகக் குறிக்கப்பட்ட கீழெல்லைத் தொகை வேலை நாட்களுக்கு வேலைசெய்திராவிடின், அத்தகைய கீழெல்லை வேலை நாட்களின் தொகைக்கும் உத்தரவின்றி வேலைக்கு வராத நாட்களின் தொகைக்கு மிடையேயுள்ள வித்தியாசத்திற்கும் அத்தகைய கீழெல்லை வேலை நாட்களின் தொகைக்கும் உள்ள அதே விகிதாசாரத்தை இப்பாகத்தில் அவ்வகுப்பு சம்பந்தமாக விதிக்கப்பட்ட கீழெல்லை மாதச் சம்பள விகிதத்திற்கு உடைய தொகையே அவருக்கு அம்மாதச் சம்பளமாகக் கொடுக்கப்படவேண்டும்.

(6) விடுமுறை நாட்களில் அல்லது முழுச் சம்பளத்துடன் விடுப்பு அனுமதிக்கப்படும் நாட்களில் வேலைக்கு வராமை அனுமதியின்றி வேலைக்கு வராமையாகக் கருதப்படலாகாது.

| 1 | 2 | | | | | | 3 | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொழிலாளர் வகுப்பு | ஒரு மாதத்திற்குரிய அடிப்படை வீதம் | | | | | | ஒரு மாதத்திற்குரிய விசேட படி | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | (அ) முந்திய மாதத்திற்குரிய வாழ்க்கைச் செலவுப் புள்ளி 100.1 ஆகவிருக்கு மிடத்து விசேட்படி | | | | | | (ஆ) முந்திய மாதத்திற்குரிய வாழ்க் கைச் செலவுப் புள்ளி 100.0 ஆகவிருக்குமிடத்து விசேட படி | | | | | | (இ) முந்திய மாதத்திற்குரிய வாழ்க்கைச் செலவுப்புள்ளி 100.1 க்குக் கூடுதலாக அல்லது 100.0 க்குக் குறைவாக விருக்குமிடத்து 100.1 க்குக் கூடுதலாக அல்லது 100.0க்குக் குறைவாகவிருக்கும் ஒவ்வொரு பூரண 1.8 புள்ளிகளுக்கும் (1.8 புள்ளிகளுக்குட்படின் கவனிக்கப்படமாட்டா) ஈழே முறைப்படி I ம், II ம் சூசிகளிற் காட்டப்பட்டவாறு பின்னால் வரும் விகிதங்களின் பிரகாரம் கணிக்கப்பட்ட ஒரு தொகையால் ஏற்றவாறு முற்போந்த 3(அ) ம் பந்தியில் கூறப்பட்ட விசேடபடி விகிதம் அதிகரிக்கும் அல்லது முற்போந்த 3(ஆ) ம் பந்தியிற் கூறப்பட்ட விசேடபடி விகிதம் குறையும் | | | | | |
| | தொழில் கற்போரும் பயிலுவோரும் தவிர்ந்த ஏனைய தொழிலாளருக்கு | தொழில் கற்போருக்கும் பயிலுவோருக்கும் | | | | | தொழில் கற்போரும் பயிலுவோரும் தவிர்ந்த ஏனைய தொழிலாளருக்கு | தொழில் கற்போருக்கும் பயிலுவோருக்கும் | | | | | தொழில் கற்போரும் பயிலுவோரும் தவிர்ந்த ஏனைய தொழிலாளருக்கு | தொழில் கற்போருக்கும் பயிலுவோருக்கும் | | | | | தொழில் கற்போரும் பயிலுவோரும் தவிர்ந்த ஏனைய தொழிலாளருக்கு | தொழில் கற்போருக்கும் பயிலுவோருக்கும் | | | | |
| | | 1ம் ஆண்டு | 2ம் ஆண்டு | 3ம் ஆண்டு | 4ம் ஆண்டு | 5ம் ஆண்டு | | 1ம் ஆண்டு | 2ம் ஆண்டு | 3ம் ஆண்டு | 4ம் ஆண்டு | 5ம் ஆண்டு | | 1ம் ஆண்டு | 2ம் ஆண்டு | 3ம் ஆண்டு | 4ம் ஆண்டு | 5ம் ஆண்டு | | 1ம் ஆண்டு | 2ம் ஆண்டு | 3ம் ஆண்டு | 4ம் ஆண்டு | 5ம் ஆண்டு |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| **அ—வகுப்புத் தொழிலாளர் :** புறேசெஸ் கலைஞர், புறேசெஸ் படப்பெட்டி இயக்குநர், புறேசெஸ் செதுக்கோவியர், புறேசெஸ் வேலையாட்கள், சிலைப்பதிவு (லேதோ) கலைஞர், சிலைப்பதிவு, ஓப்செற் பேணுவோர், சுழல்பொறி பேணுவோர், போட்டோ கிரேவரும் ரோட்டகிரேன் பொறி பேணுவோரும், தகரத்தட்டில் அச்சிடுவோர், திரைப்படங்களில் எழுத்துக் களமைப்போர், வரியச்சு இயக்குநர், ஒற்றையச்சுச் சாவித்தட்டு இயக்குநர், லட்டோ பொறி இயக்குநர், வரியச்சுப்பொறித் தொழிலாளர், அச்சியந்திரத் தொழிலாளர், புறேசெஸ் பொறிப்போரும் மேலொட்டுவோரும், புறேசெஸ் அச்சிடுவோர் டவுன், சிலைப்பதிவு மாற்றுவோர்,சிலைப்பதிவுப்படிக்குறிப்பு வேலையாளர், புதினத்தாள் உற்பத்திசெய்வதில் ஈடுபடுவோரல்லாத வாசித்துத்திருத்துவோர். | 121 18 | 39 0 | 51 0 | 64 0 | 80 0 | 98 0 | 96 42 | 42 12 | 50 02 | 57 92 | 59 52 | 81 62 | 94 42 | 41 52 | 49 22 | 56 92 | 68 22 | 80 2 | 2 0 | 0 60 | 0 80 | 1 0 | 1 30 | 1 60 |

**ஆ—வகுப்புத் தொழிலாளர் :**

ஒற்றையச்சு வார்ப்பு இயக்குநர் (பரிசரர்), மேல்வார்ப்புப் பரிசரர், எல்றொட் பொறி இயக்குநர், அச்சுக் கோர்ப்போர், கைதேர்ந்த அச்சுக் கோர்ப்போரும் பதிப்புச் சட்டத்தில் அமைப்போரும், படிக் குறிப்பு வேலையாளர், அழுத்து சிலின்டர் பொறி பேணுவோரும் ஊட்டுவோரும், பட்டுத்திரைப் பொறி இயக்குநர், ரப்பர் முத்திரையச்சுச் செய்வோர், மேற்புற முத்திரை செய்வோர், புறத்துருவமைப்பு அச்சுப்பொறி இயக்குநர், புத்தகங் கட்டுவோர், புத்தகங் கட்டுபொறி இயக்குநர், தையல் இயந்திர இயக்குநர், மடிக்கும் இயந்திர இயக்குநர், அட்டைப்பெட்டி வெட்டியொட்டுபொறி இயக்குநர், வெட்டுவோர் (கையாலும் இயந்திரத்தாலும்), காகிதம் வெட்டுபொறி இயக்குநர், பொற்பூச்சுப்பொறி இயக்குநரும்

| 1 தொழிலாளரின் வகுப்பு | 2 ஒரு மாதத்திற்குரிய அடிப்படை வீதம் | | | | | | 3 ஒரு மாதத்திற்குரிய விசேட படி | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | (அ) முந்திய மாதத்திற்குரிய வாழ்க்கைச் செலவுப் புள்ளி 100.1 ஆகவிருக்குமிடத்து விசேடபடி | | | | | | (ஆ) முந்திய மாதத்திற்குரிய வாழ்க்கைச் செலவுப் புள்ளி 100.0 ஆகவிருக்குமிடத்து விசேட படி | | | | | | (இ) முந்திய மாதத்திற்குரிய வாழ்க்கைச் செலவுப்புள்ளி 100.1 க்குக் கூடுதலாக அல்லது 100.0 க்குக் குறைவாக விருக்குமிடத்து 100.1 க்குக் கூடுதலாக அல்லது 100.0க்குக் குறைவாகவிருக்கும் ஒவ்வொரு பூரண 1.8 புள்ளிகளுக்கும் (1.8 புள்ளிகளுக்குட்படின் கவனிக்கப்படமாட்டா) ஈழே முறைப்படி I ம், II ம் சூசிகளிற் காட்டப்பட்டவாறு பின்னல் வரும் விகிதங்களின் பிரகாரம் கணிக்கப்பட்ட ஒரு தொகையால் எற்றவாறு முற்போந்த 3(அ) ம் பந்தியில் கூறப்பட்ட விசேடபடி விகிதம் அதிகரிக்கும் அல்லது முற்போந்த 3(ஆ) ம் பந்தியிற் கூறப்பட்ட விசேடபடி விகிதம் குறையும் | | | | | |
| | தொழில் கற்போரும் பயிலுவோரும் தவிர்ந்த ஏனைய தொழிலாளருக்கு | தொழில் கற்போருக்கும்பயிலுவோருக்கும் | | | | | தொழில் கற்போரும் பயிலுவோரும் தவிர்ந்த ஏனைய தொழிலாளருக்கு | தொழில் கற்போருக்கும் பயிலுவோருக்கும் | | | | | தொழில் கற்போரும் பயிலுவோரும் தவிர்ந்த ஏனைய தொழிலாளருக்கு | தொழில் கற்போருக்கும் பயிலுவோருக்கும் | | | | | தொழில் கற்போரும் பயிலுவோரும் தவிர்ந்த ஏனைய தொழிலாளருக்கு | தொழில் கற்போருக்கும் பயிலுவோருக்கும் | | | | |
| | | 1ம் ஆண்டு | 2ம் ஆண்டு | 3ம் ஆண்டு | 4ம் ஆண்டு | 5ம் ஆண்டு | | 1ம் ஆண்டு | 2ம் ஆண்டு | 3ம் ஆண்டு | 4ம் ஆண்டு | 5ம் ஆண்டு | | 1ம் ஆண்டு | 2ம் ஆண்டு | 3ம் ஆண்டு | 4ம் ஆண்டு | 5ம் ஆண்டு | | 1ம் ஆண்டு | 2ம் ஆண்டு | 3ம் ஆண்டு | 4ம் ஆண்டு | 5ம் ஆண்டு |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| பொற்பூச்சுப் பூசுவோரும், கோடிடுவோர் (கையாலும் இயந்திரத்தாலும்), ஈயத்தாற்பிரதி தயாரிப்போர், அச்சுப்பதிப்பு இயந்திர இயக்குநர், வார்ப்புத் தொழிலாளர், வார்ப்புத்தகடு வார்ப்போர், அச்சுவார்ப்போர், பிளேற்றன் பூரண தன்னியக்கப்பொறி பேணுவோர், உருளி வார்ப்புப் பொறியை உபயோகித்து உருளி வார்ப்போர், பிளேற்றன் பொறிபேணுவோர் (கையால் ஊட்டுதல்), உருளி வார்ப்போர் (கையால்) .. .. .. | 109 99 | 32 0 | 43 0 | 57 0 | 73 0 | — | 77 92 | 36 57 | 48 17 | 54 22 | 62 96 | — | 76 42 | 36 12 | 47 42 | 53 32 | 61 84 | — | 1 50 | 0 45 | 0 75 | 0 90 | 1 12 | — |
| **இ—வகுப்புத் தொழிலாளர் :** உலேக்களத் தகடு வெட்டுவோர், உலேக்களத் தொழிலாளர், சுழல் பொறித் தொழிலாளர், அடுக்கிக் கட்டுவோர், எண்ணுவோரும் சரிபார்ப்போரும் .. .. .. | 84 63 | 30 0 | 36 0 | 44 0 | 53 0 | — | 68 67 | 38 42 | 43 51 | 48 67 | 56 15 | — | 67 42 | 37 92 | 42 84 | 47 92 | 55 21 | — | 1 25 | 0 50 | 0 62 | 0 75 | 0 94 | — |
| **ஈ—வகுப்புத் தொழிலாளர் :** 18 வயதுக்குட்படாத தேர்ச்சியற்ற தொழிலாளர் | 57 5 | 25 0 | 30 0 | 36 0 | 43 0 | — | 57 15 | — | — | — | — | — | 56 21 | — | — | — | — | — | 0 94 | — | — | — | — | — |
| **உ—வகுப்புத் தொழிலாளர் ;** 18 வயதுக்குட்பட்ட தேர்ச்சியற்ற தொழிலாளர் .. | 37 28 | — | — | — | — | — | 39 7 | — | — | — | — | — | 38 62 | — | — | — | — | — | 0 45 | — | — | — | — | — |
| **ஊ—வகுப்புத் தொழிலாளர் :** காவற்காரர் .. .. .. | 58 4 | — | — | — | — | — | 59 42 | — | — | — | — | — | 58 42 | — | — | — | — | — | 1 0 | — | — | — | — | — |

மேலே 3 ம் பத்தியிற் கூறப்பட்ட பணிப்புரைகளை இயைவுபடுத்திக்காட்டும் சூசி

| | I–ம் சூசி வாழ்க்கைச் செலவுப் புள்ளி அதிகரிப்பின் கொடுபடவேண்டிய விசேட படி வாழ்க்கைச் செலவுப் புள்ளிகள் | | | | | II–ம் சூசி வாழ்க்கைச் செலவுப் புள்ளி குறையின் கொடுபடவேண்டிய விசேட படி வாழ்க்கைச் செலவுப் புள்ளிகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 100.1 முதல் 101.8 வரை | 101.9 முதல் 103.6 வரை | 103.7 முதல் 105.4 வரை | 105.5 முதல் 107.2 வரை | 107.3 முதல் 109.2 வரை | 100.0 முதல் 98.3 வரை | 98.2 முதல் 96.5 வரை | 96.4 முதல் 94.7 வரை | 94.6 முதல் 92.7 வரை | 92.8 முதல் 91.1 வரை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| அ வகுப்பு | | | | | | | | | | |
| தொழில் கற்போர் அல்லது பயிலுவோர் தவிர்ந்த ஏனைய தொழிலாளர் .. .. | 96 42 | 98 42 | 100 42 | 102 42 | 104 42 | 94 42 | 92 42 | 90 42 | 88 42 | 86 42 |
| தொழில் கற்போர் அல்லது பயிலுவோர் | | | | | | | | | | |
| 1–ம் ஆண்டு .. .. | 42 12 | 42 72 | 43 32 | 43 92 | 44 52 | 41 52 | 40 92 | 40 32 | 39 72 | 39 12 |
| 2–ம் ஆண்டு .. .. | 50 02 | 50 82 | 51 62 | 52 42 | 53 22 | 49 22 | 48 42 | 47 62 | 46 82 | 46 02 |
| 3–ம் ஆண்டு .. .. | 57 92 | 58 92 | 59 92 | 60 92 | 61 92 | 56 92 | 55 92 | 54 92 | 53 92 | 52 92 |
| 4–ம் ஆண்டு .. .. | 69 52 | 70 82 | 72 12 | 73 42 | 74 72 | 68 22 | 66 92 | 65 62 | 64 32 | 63 02 |
| 5–ம் ஆண்டு .. .. | 81 62 | 83 22 | 84 82 | 86 42 | 88 02 | 80 02 | 78 42 | 76 82 | 75 22 | 73 62 |
| ஆ வகுப்பு— | | | | | | | | | | |
| தொழில் கற்போர் அல்லது பயிலுவோர் தவிர்ந்த ஏனைய தொழிலாளர் .. .. | 77 92 | 79 42 | 80 92 | 82 42 | 83 92 | 76 42 | 74 92 | 73 42 | 71 92 | 70 42 |
| தொழிற் கற்போர் அல்லது பயிலுவோர் | | | | | | | | | | |
| 1–ம் ஆண்டு .. .. | 36 57 | 37 02 | 37 47 | 37 92 | 38 37 | 36 12 | 35 67 | 35 22 | 34 77 | 34 32 |
| 2–ம் ஆண்டு .. .. | 48 17 | 48 92 | 49 67 | 50 42 | 51 17 | 47 42 | 46 67 | 45 92 | 45 17 | 44 42 |
| 3–ம் ஆண்டு .. .. | 54 22 | 55 12 | 56 02 | 56 92 | 57 82 | 53 32 | 52 42 | 51 52 | 50 62 | 49 72 |
| 4–ம் ஆண்டு .. .. | 62 96 | 64 08 | 65 20 | 66 32 | 67 44 | 61 84 | 60 72 | 59 60 | 58 48 | 57 36 |
| இ வகுப்பு—இனம் 1 | | | | | | | | | | |
| தொழில் கற்போர் அல்லது பயிலுவோர் தவிர்ந்த ஏனைய தொழிலாளர் .. .. | 68 67 | 69 92 | 71 17 | 72 42 | 73 67 | 67 42 | 66 17 | 64 92 | 63 67 | 62 42 |
| தொழில் கற்போர் அல்லது பயிலுவோர் | | | | | | | | | | |
| 1–ம் ஆண்டு .. .. | 38 42 | 38 92 | 39 42 | 39 92 | 40 42 | 37 92 | 37 42 | 36 92 | 36 42 | 35 92 |
| 2–ம் ஆண்டு .. .. | 43 46 | 44 08 | 44 70 | 45 32 | 45 94 | 42 84 | 42 22 | 41 60 | 40 98 | 40 36 |
| 3–ம் ஆண்டு .. .. | 48 67 | 49 42 | 50 17 | 50 92 | 51 67 | 47 92 | 47 17 | 46 42 | 45 67 | 44 92 |
| 4–ம் ஆண்டு .. .. | 56 15 | 57 09 | 58 03 | 58 97 | 59 91 | 55 21 | 54 27 | 53 33 | 52 39 | 51 45 |
| ஈ வகுப்பு— | | | | | | | | | | |
| தொழிலாளர் யாவரும் .. | 57 15 | 58 09 | 59 03 | 59 97 | 60 91 | 56 21 | 55 27 | 54 33 | 53 39 | 52 45 |
| உ வகுப்பு— | | | | | | | | | | |
| தொழிலாளர் யாவரும் .. | 39 07 | 39 52 | 39 97 | 40 42 | 40 87 | 38 62 | 38 17 | 37 72 | 37 27 | 36 82 |
| ஊ வகுப்பு— | | | | | | | | | | |
| தொழிலாளர் யாவரும் .. | 59 42 | 60 42 | 61 42 | 62 42 | 63 42 | 58 42 | 57 42 | 56 42 | 55 42 | 54 42 |

இந்த அட்டவணையில் " ஆண்டு " என்னும் சொல் ஒரு தொழில் கற்போர் அல்லது பயிலுவோர் குறித்து 288 தொடர்ச்சியான வேலை நாட்களைக் கொண்டதெனக் கருதப்படும். அது பின்வருவனவற்றையும் உட்படுத்தும்,

(அ) வேலைக்கமர்த்துபவர் 25 ம் பிரிவின்கீழ் அத்தகைய தொழில் கற்போருக்கு அல்லது பயிலுவோருக்குக் கொடுக்கும் ஒவ்வொரு விடுமுறையும் ;

(ஆ) வேலைக்கமர்த்துபவரின் அனுமதியுடன் வேலைக்கு வராத ஒவ்வொரு நாளும் ;

(இ) தமது வேலை காரணமாகவும் வேலை செய்துகொண்டிருக்கும்பொழுதும் ஏற்பட்ட தற்செயல் அபாயங் காரணமாகத் தொழிலாளிக்கு நேர்ந்த காயத்தின் பொருட்டு வராதிருக்கும் ஒவ்வொரு நாளும் ;

(ஈ) (112 ம் அத்தியாயமாகிய) தொழிலாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தின் III ம் அட்டவணையிற் குறிக்கப்பட்ட தொழிலாலான யாதாயினும் நோய் காரணமாக வேலைக்கு வராத ஒவ்வொரு நாளும் ;

(உ) வேலைக்கமர்த்துபவர் அத்தகைய தொழில் கற்போருக்கு அல்லது பயிலுவோருக்கு வேலைகொடுக்கத் தவறும் ஒவ்வொரு நாளும், ஆனால், 24 ம் பிரிவின்கீழ் வாராந்த விடுமுறையாக நியமிக்கப்பட்ட நாள் இதற்குட்பட்டதன்று.

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## காலஞ்சென்ற பிரதம மந்திரி கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் உருவப்படத்தை குறிக்கும் 10 சதப் பெறுமதியுடைய முத்திரைகளின் மீள வெளியீடு

1964 ஆம் ஆண்டின் ஜூலை மாதம் 1 ஆம் திகதி வெளியிடப்பட்டு 1966 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி விற்பனையிலிருந்து விலக்கப்பட்ட காலஞ்சென்ற பிரதம மந்திரி கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் உருவப்படத்தைக் குறிக்கும் 10 சதப் பெறுமதியுடைய அஞ்சல் இறைவரி வரையறை முத்திரைகள் 1970 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து விற்பனவுக்காக மீள வெளியிடப்படும் என்பது இத்தால் பொதுச் செய்தியாக அறிவிக்கப்படுகின்றது. 1970 ஆம் ஆண்டு செப்தெம்பர் 1 ஆம் திகதியிலிருந்து நடைமுறையிலிருக்கும் 10 சதப் பெறுமதியுடைய முத்திரைகள் விலக்கப்படும். ஆனாலும் அதற்கு முன்னர் வாங்கிய அவ்வகையான முத்திரைகள் பிரயோகிக்கப்படலாம்.

இம் முத்திரைகள் நீல நிறத்தில் 24 × 29 மில்லிமீட்டர்ஸ் அளவில் நிழற்பட முறையாக அச்சிடப்பட்டுள்ளது.

ச. சிற்றம்பலம்,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு 1,
20, ஆகஸ்டு 1970.

8–1028

---

## கொழும்பு மருத்துவக் கல்லூரியின் நூற்றுண்டு விழாவினை கொண்டாடும் நினைவாக விசேட முத்திரைகளின் வெளியீடு

கொழும்பு மருத்துவக் கல்லூரியின் நூற்றுண்டு விழாவினைக் கொண்டாடும் நினைவாக 1970 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 1 ஆம் திகதி 5 சத, 45 சதப் பெறுமதியுடைய விசேட முத்திரைகள் வெளியிடப்படுமென பொதுச் செய்தியாக அறிவிக்கப்படுகின்றது. 1971 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28 ஆம் திகதி வரைக்கும் அல்லது கையிருப்பு முத்திரைகள் முடியும் வரைக்கும் இவற்றுள் எது முந்தியதோ அது வரைக்கும் இம்முத்திரைகள் விற்பனைக்கிருக்கும். இக்காலத்தினிடையில் இப்போது விற்பனவில் இருக்கும் 5 சதப் பெறுமதியுடைய முத்திரைகளின் விற்பனவு இடைநிறுத்தப்படும்.

2. 5 சத, 45 சதப் பெறுமதியுடைய முத்திரைகள் கற்றலின் சம்பிரதாயச் சின்னமாகிய விளக்கையும் மருத்துவத் தொழிலின் சின்னமாகிய கைக்கோலையும் குறிக்கும்.

ச. சிற்றம்பலம்,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு 1,
20, ஆகஸ்டு 1970.

8–1027

---

## கம்பனிகள் கட்டளைச் சட்டம் (145 ம் அத்தியாயம்)

*277 (5) ம் பிரிவின் கீழ் பெயர் நீக்கத்துக்கான அறிவித்தல்*

*த கொலம்பு நோர்த் பீபிள்ஸ் ரேடிங் கம்பெனி லிமிரட்.*

*கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) ஏற்பாடுகளின் கீழ் 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 11 ம் திகதியில் உருவாக்கப்பெற்ற த கொலம்பு நோர்த் பீபிள்ஸ் ரேடிங் கம்பெனி லிமிரட் என்னும் கம்பனி வியாபாரம் செய்யவில்லையெனவும் செயற்படவில்லையெனவும் நம்புவதற்கு போதிய காரணம் இருப்பதாலும், 1970. 3. 26 ம் திகதியுடைய 14,899 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1970. 3. 10 ம் திகதியையுடைய அறிவித்தலின் பிரகாரம் த கொலம்பு நோர்த் பீபிள்ஸ் ரேடிங் கம்பனி லிமிரட், அதற்கு மாறுபாடாகக் காரணம் காட்டப்பட்டாலன்றி அந்தத் திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவுறும்போது பதிவேட்டிலிருந்து பெயர் நீக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருப்பதாலும், த கொலம்பு நோர்த் பீபிள்ஸ் ரேடிங் கம்பனி லிமிரட் மூன்று மாதகால எல்லைக்குள் மாறுபாடாகக் காரணம் எதையும் காட்டாதமையாலும் கம்பனிகள் பதிவாளராகிய, ஜெயரத்தினம் பீலிக்ஸ் பொன்னம்பலம் ஆகிய நான், (145 ம் அத்தியாயம்) 277 (5) ம் பிரிவின் கீழ் செயலேற்று இந்த அறிவித்தலின் மூலம் த கொலம்பு நோர்த் பீபிள்ஸ் ரேடிங் கம்பனி லிமிரட் என்னும் கம்பனி, இன்றைய தினம் கம்பனிகள் பதிவேட்டிலிருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்டு குலைக்கப்பட்டதென பிரகடனம் செய்கிறேன்.*

*ஜெ. பீ. பொன்னம்பலம்,
கம்பனிகள் பதிவாளர்.*

*கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1. 1970, ஆகஸ்டு மாதம் 8 ஆம் திகதி.*

*8-967*

---

## கம்பனிகள் கட்டளைச் சட்டம் (145 ம் அத்தியாயம்)

*277(3) ம் பிரிவின்கீழ் பெயர் நீக்கத்திற்கான அறிவித்தல்*

*மௌலானா (சிலோன் புரடியூஸ்) லிமிரட்*

*கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) ஏற்பாடுகளின்கீழ் 1966.3.10 ம் திகதியில் கூட்டப்பெற்ற மௌலானா (சிலோன் புரடியூஸ்) லிமிரட் என்னும் கம்பனி வியாபாரம் செய்யவில்லை எனவும், செயற்படவில்லை எனவும் நம்புவதற்கு நியாயமான காரணம் இருத்தலால் இதற்கு மாறுபாடான காரணம் காட்டாதவிடத்து, கம்பனிகள் பதிவாளராகிய, ஜெயரத்தினம் பீலிக்ஸ் பொன்னம்பலம் ஆகிய நான், கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) 277(3) ம் பிரிவின்படி செயலேற்று, இத்திகதியிலிருந்து மூன்று மாத இறுதியில், மௌலானா (சிலோன் புரடியூஸ்) லிமிரட் இன் பெயர் இத்திணைக்களத்தில் இருக்கும் கம்பனிகள் பதிவேட்டிலிருந்து நீக்கப்பெற்று, குறித்த கம்பனி குலைக்கப்படுமென இத்தால் அறிவித்தல் தருகிறேன்.*

*ஜெ. பீ. பொன்னம்பலம்,
கம்பனிகள் பதிவாளர்.*

*கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1,
1970 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ம் திகதி.*

*8-991*

---

## பிரகடனம்

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மண்முனை தென் எருவில் போரதீவுப் பற்று பகுதியில் விசர் நாய் அபாயம் இருப்பதால், இம்மாவட்டப் பதில் அரசாங்க அதிபர், தேவநேசன் நேசையா ஆகிய நான், விசர் நாய்ச்சட்டத்தின் (இலங்கை சட்டநிரூபண சட்டத்தின் 476 ம் அத்தியாயம்—தொகுப்பு 12) 11 ம் பிரிவின், (1) ம் உட்பிரிவின் பிரகாரம், விசர் நாய் அபாயம் இருக்கும் பகுதிகளாக இவற்றைப் பிரகடனப்படுத்துகின்றேன்.

மேற்கூறிய பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள, சொந்தக் கட்டிடங்களிலோ, வளவுகளிலோ, தோட்டங்களிலோ தவிர்ந்த வேறு பொது இடங்களிலோ, தெருக்களிலோ, கட்டப்படாமல் அல்லது வழிநடத்தப்படாமல் இருக்கும் எந்த ஒரு நாயும், விசர் நாய்ச்சட்டத்தின் 11 (2) ம் பிரிவின் கீழ் (இலங்கை சட்டநிரூபண சட்டத்தின் 476 ம் அத்தியாயம் தொகுப்பு 12) அழிக்கப்பட ஏதுவாகும்.

தே. நேசையா,
மட்டக்களப்பு மாவட்ட பதில் அரசாங்க அதிபர்.

கச்சேரி, மட்டக்களப்பு,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ந் திகதி.

8–1021

---

## இலங்கைப் புகைவண்டித் திணைக்களம்—புகையிரதக்கடவை செப்பனிடுதல்

தலைமன்னார் புகையிரதப்பாதை 184 மைல் 20 சங்கிலி 13 லிங்சில் (மதவாச்சி மன்னார் பிரதான மாராமத்து வீதியிலிருந்து புதுக்குளம் செல்லும் வீதி) அமைந்துள்ள புகையிரதக்கடவை திருத்த வேலை காரணமாக 11. 9. 70 காலை 6.00 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை ஒரு பகுதி மூடப்பட்டிருக்கும்.

திருத்த வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரம் வாகனங்கள் இதே புகையிரதக்கடவையால் செல்லுவதற்கு உதவி செய்யப்படும்.

ஜே. போல் சேனரத்தின,
புகையிரதப்பகுதி தலைமை அதிகாரிக்காக.

*8-951*

## கொழும்பு மாவட்டத்தில் 1969/70 ம் வருடத்தில் கால் நடைகளுக்குக் குறிசுடுவதற்கான கால அட்டவணை

1962 நவம்பர் மாதம் 23 ந் திகதி 13,406 ம் இலக்கத்துடன் வெளியான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் கால்நடைகளுக்கு குறிசுடுதல் சம்பந்த நீதித் தொகுப்பின் 12 (iii) பிரிவின்படி கொழும்பு மாவட்டத்தில் அளுத்குறு கோறளே தெற்கு " எ " காரியாதிகாரியின் பிரிவின் 1969/70 ம் வருடத்தின் கால்நடைகளுக்கு குறிசுடுதல் தின அட்டவணை பொதுமக்களின் அறிவித்தலுக்காகக் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

டி. டபிள்யூ. த அல்விஸ்,
கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபர்.

அரசாங்க அதிபர், செயலகம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 18 ந் ௳.

| கிராமசேவகர் பிரிவும் இலக்கமும் | குறிசுடும் நிலையம் | திகதி |
|---|---|---|
| 181—ருகம வடக்கு | கிராகசேவகர் காரியாலயம் அமைந்திருக்கும் காணி | 70.9.1, 2 |
| 181—ருகம தெற்கு | திருமதி. ஜீ. வி. குணசேகரவிற்குச் சொந்தமான கொம்பனிவத்த | 70.9.3 |
| 183—நாகொட | கிராமசேவகர் காரியாலய வளவு | 70.9.5 |
| 184—கந்தானே | டிை டிை | 70.9.7 |
| 185—படகம தெற்கு | டிை டிை | 70.9.9 |
| 186—நிலவுல்ல | கம்பிகொட்டுவத்த | 70.9.13 |
| 187—நேதுறுபிட்டிய | கிராமசேவகர் காரியால வளவு | 70.9.16 |
| 188/89—கல்எலிய | டிை டிை | 70.9.18 |
| 190—வெலிகம்பிட்டிய | டிை டிை | 70.9.20 |
| 191—கனுவன | கம்மல்வத்த | 70.9.23 |
| 192—குடல்ல | கிராமசேவகர் காரியாலய வளவு | 70.9.1 |
| 193—தெலதுற | டிை டிை | 70.9.3 |
| 194—தண்டுகம | டிை டிை | 70.9.5 |
| 195/96—குடகஹபொல | டிை டிை | 70.9.7 |
| 197—உதம்மிட்ட | டிை டிை | 70.9.9,10 |
| 198—அலவத்துபிட்டிய | கெபெல்ல கொடெல்ல என்னும் காணி | 70.9.11 |
| 199—ரத்தொழுவ | அம்பகஹவத்த என்னும் காணி | 70.9.13 |
| 200/201—தெம்பல | கிராமசேவகர் காரியாலய வளவு | 70.9.16 |
| 202—குஸ்வல | டிை டிை | 70.9.18 |
| 203—கனேபொல | டிை டிை | 70.9.20 |
| 204—கொட்டுகொட | டிை டிை | 70.9.1 |
| 205—ஏகல குருந்துவத்த | டிை டிை | 70.9.3 |
| 206—ஏகல | டிை டிை | 70.9.5,6 |
| 207—நிவன்தம் | டிை டிை | 70.9.9 |
| 207—நிவந்தம | மில்லகஹவத்த | 70.9.10 |
| 208—மிதெல்லவிட்ட | டபிள்யூ. ஏ. டி. சி. எம். கருணநாயக்க என்பவருக்குரிய காணி | 70.9.12 |
| 209—பொல்லத்த | கிராமசேவகர் காரியாலய வளவு | 70.9.14 |
| 209—பொல்லத்த | மில்லகஹவத்த என்னும் காணி | 70.9.16 |
| 210—புலுகஹகொட | கிராமசேவகர் காரியாலய வளவு | 70.9.18 |
| 211—பட்டகம வடக்கு | டிை டிை | 70.9.20 |
| 212—வல்பொல | லேக்சயிட்வத்த என்னும் காணியில் உள்ள விளையாட்டு மைதானம் | 70.9.23 |
| 213/14—பட்டுவத்த | கிராமசேவகர் காரியாலய வளவு | 70.9.25 |
| 215—கலஹிட்டியாவ | டிை டிை | 70.9.1 |
| 216—கொறகொல்ல | டிை டிை | 70.9.3 |
| 216—கொறகொல்ல | திப்கொட்டுகொட கெற்றகெலகஹவத்த காணி | 70.9.4 |
| 217—மாபிம | கிராமசேவகர் காரியாலய வளவு | 70.9.6 |
| 218—மாகேவிட்ட | டிை டிை | 70.9.9 |
| 219—கோனகஹவத்த | டிை டிை | 70.9.11 |
| 220—கிரிந்திவிட்ட | கிராமசேவகர் காரியாலயத்தில் அமைந்துள்ள காணி | 70.9.13 |
| 221—மாகிலங்கமுவ | டிை டிை | 70.9.18 |
| 222—அக்கறவிட்ட | கெனகொறகஹலந்த காணி | 70.9.18 |
| 223—மெதகம | கிராமசேவகர் காரியாலய வளவு | 70.9.20 |
| 224—இகலகம | தெல்கஹவத்த என்னும் காணி | 70.9.23 |

8–945

---

## மாத்தறை மாவட்டத்திலுள்ள மொறவக் கோறளை மேற்கு பிரிவுக்காரியாதிகாரி பிரிவிலுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளைப் புனரமைப்புச் செய்தல்

1970 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 1 ம் திகதியிலிருந்து மாத்தறை பரிபாலன மாவட்டத்திலுள்ள மொறவக்கோறளை மேற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 241 ம் இலக்கத்தைக்கொண்ட பள்ளேகம கிராமசேவையாளர் பிரிவும் 243 ம் இலக்கத்தைக்கொண்ட தெனியாய கிராமசேவையாளர் பிரிவும் முன்று கிராம சேவையாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதென பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

(எ) பின்வரும் திட்டங்கள்/கிராமங்கள் 241 ம் இலக்கத்தைக்கொண்ட பள்ளேகம கிராம சேவயாளர் பிரிவில் அடங்கும் ;—

(1) பள்ளேகமவும் ;
(2) பதவலவும்.

(பீ) பின்வரும் கிராமங்கள் 241 ஏ இலக்கத்தைக்தைக்கொண்ட கிரிவல்தொல கிராம சேவையாளர் பிரிவில் அடங்கும் :

(1) கிரிவல்தொல.
(2) பற்றெயாய
(3) கன்தில்பான
(4) கிரிவல்லகம
(5) தெகிகம்பல
(6) தல்கந்த
(7) வெலங்கஹேன
(8) கொல்லகந்த மேற்கும்

(சீ) பின்வரும் கிராமங்கள் 243 ம் இலக்கத்தைக்கொண்ட தெனியாய கிராம சேவையாளர் பிரிவில் அடங்கும் :

(1) தெனியாய
(2) கனுகலகேன
(3) மத்துகொடே
(4) கொல்லகந்த கிழக்கும்

2. இப்புதிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு நீதி மன்றமும், கிராமக்கோடும், பொலீஸ் நிலையமும், இப்பிரிவில் சேரும் பிறப்பு, இறப்பு விவாகப்பதிவுப் பிரிவும், தேர்தல் மாவட்டமும், உள்ளூராட்சிப் பிரிவும் பொது அறிவித்தலுக்காகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| கிராமசேவையாளர் பிரிவு | நீதிமன்றம் | கிராமக்கோடு | பொலீஸ் நிலையம் | பிறப்பு இறப்பு விவாகப் பதிவு பகுதி | உள்ளூராட்சி நிறுவனம் | தேர்தல் மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|
| (1) பள்ளேகம .. | மாத்தறையும் உல்லாசக்கோடும் தெனியாய | தெனியாய | வறல்ல ... | பள்ளேகம .. | தெனியாய கிராமச் சபை | 66. தெனியாய |
| (2) கிரிவல்தொல .. | மாத்தறையும் உல்லாசக்கோடும் தெனியாய | தெனியாய | வறல்ல .. | உடுவக்க பள்ளேகம | தெனியாய கிராமச் சபை | 66. தெனியாய |
| (3) தெனியாய .. | மாத்தறையும் உல்லாசக்கோடும் தெனியாய | தெனியாய | வறல்ல .. | உடுவக்க .. | தெனியாய கிராமச் சபை | 66. தெனியாய |

1970 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 14 ம் திகதிய 14,903 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் 241 ஆம் இலக்க பள்ளேகம கிராம சேவையாளர் பிரிவைப் பிரித்தல் பற்றி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1970.4.24 ம் திகதிய அறிவித்தல் இதன் மூலம் இரத்துச்செய்யப்படுகின்றது.

கச்சேரி, மாத்தறை,
1970 ந் ஆண்டு யூலை மீ 26 ம் திகதி.

ரீ. தேவேந்திர,
பதில் அரசாங்க அதிபர், மாத்தறை மாவட்டம்.

8–992

## வர்த்தமானி வெளியிடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர்.** தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| ஓகத்து | 7. 8.70 | வெள்ளி | 30. 7.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 14. 8.70 | வெள்ளி | 7. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 21. 8.70 | வெள்ளி | 14. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28. 8.70 | வெள்ளி | 21. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் | 4. 9.70 | வெள்ளி | 28. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11 9.70 | வெள்ளி | 4. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி | 11. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி | 18. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்ரோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 5 ஆந் உ.

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.